செ.வெ.எண் 32 நாள்: 15.12.2020

**அரியலூர் மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டத்தில் ரூ.36.73 கோடி மதிப்பிலான முடிவுற்ற 39 பணிகளை திறந்து வைத்தும், ரூ.26.52 கோடி மதிப்பிலான 14 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.129.34 கோடி மதிப்பில் 21,504 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தும், கொரோனா நோய் தடுப்பு பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளவுள்ளார்கள் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தகவல்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி K.பழனிசாமி** அவர்கள், 17.12.2020 அன்று முற்பகல் அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் ரூ.36.73 கோடி மதிப்பிலான முடிவுற்ற 39 பணிகளை திறந்து வைத்தும், ரூ.26.52 கோடி மதிப்பிலான 14 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.129.34 கோடி மதிப்பில் 21,504 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் மற்றும் கொரோனா தடுப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன பிரதிநிதிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ள உள்ளார்கள்.

**இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,**

அரியலூர் மாவட்டத்தில் கால்நடைப்பராமரிப்புத்துறை, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நகராட்சி (ம) குடிநீர் வழங்கல் துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.36.73 கோடி மதிப்பிலான முடிவுற்ற 39 திட்டப்பணிகளை திறந்து வைக்க உள்ளார்கள்.

தொடர்ந்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பள்ளிக்கல்வித்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நகராட்சி (ம) குடிநீர் வழங்கல் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை ஆகிய துறைகளின் சார்பாக ரூ.26.52 கோடி மதிப்பிலான 14 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார்கள்.

மேலும், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வேளாண்மைத்துறை, கூட்டுறவுத்துறை, கால்நடைப்பராமரிப்புத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மூலமாக மொத்தம் 21,504 பயனாளிகளுக்கு ரூ.129.34 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்க உள்ளார்கள்.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் மற்றும் கொரோனா நோய் தடுப்பு பணிகள் குறித்தும் அனைத்து துறை முதன்மை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ள உள்ளார்கள்.

பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன பிரதிநிதிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ள உள்ளார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**